**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு T. சோழவேந்தன்,** B.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

*******

2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 – ம் நாள் வியாழக்கிழமை

******

**<u>இடைமனு எண்.4/2022–ல் அசல் வழக்கு எண். 284/2017</u>**

பாலமுரளி .....மனுதாரர்/பிரதிவாதி...

...எதிராக...

1. கண்ணன்
2. பாலு
3. பன்னீர்செல்வம் ....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்..

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 05.09.2023 அன்று இறுதியாகவிசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு B.ரெங்கராஜு அவர்களும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

வாதிகள் தரப்பு சாட்சியை மனுதாரர்/பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்வதற்காக விசாரணை முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re-open) செய்ய கோரி இம்மமனு உ.வி.மு.ச கட்டளை–18, விதி–17–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கானது 15.11.2022 அன்று வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்றாக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியல்லாமையால்

மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய விபரம் கூறமுடியாமல் போய்விட்டது. எனவே நீதிமன்றம் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போட்ப்பட்டுள்ளது. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது மனுதாரரின் வழக்கை நிரூபிக்க அவசியமானது. எனவே வாதிகள் தரப்பு சாட்சியை மனுதாரர்/பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்வதற்காக விசாரணை முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re−open) செய்ய கோரியுள்ள இம்மமனுவினை அனுமதிக்க வேண்டும்.

2. <u>1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.</u>

மனு சட்டப்படியும் நியாயப்படியும் சரியல்ல எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர மனுவில் கூறியுள்ள சங்கதிகள்1-ம் எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறாரர். பிரதிவாதி சீர்காழியில் உள்ள பிரபலமான பெட்ரோல் பங்கின் பங்குதாரர் மற்றும் இளங்கலை பட்டம் பெற்றவர். அவ்வாறு இருக்க அவருக்கு அதிகப்படியான காய்ச்சல் இருந்ததாகவும் அதன் காரணமாக அவரது வழக்கறிஞரை சந்திக்க இயலாமல் போய்விட்டது என கூறியிருப்பது ஏற்க்கூடியதல்ல. மனுதாரருக்கு எந்த தேதியிலிருந்த எந்த தேதி வரை அதிகப்படியான காய்ச்சல் இருந்தது எனவும் எப்பபோது காய்ச்சர் குணமானது என்று மனுவில் கூறப்படவில்லை. மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் கற்பனையானது பொய்யாது. இடைமனுவில் 1-ம் வாதியான வா.சா.1-ஐ கடந்த 15.11.2022 அன்று பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்ததாகவும் அதிக காய்ச்சல் காரணமாக பிரதிவாதி அவரது வழக்கறிஞரை சந்தித்து குறுக்கு விசாரணைக்கு விவரம் கூற வில்லை என கூறியிருப்து இவ்வழக்கிற்காக சொல்லப்படும் வடிகட்டிய பொய்யாகும். 1-ம் வாதியான வா.சா.1 ஐ கடந்த 10.10.2022, 01.11.2022, 08.11.2022 மற்றும் 15.11.2022 ஆகிய நான்கு தேதிகளிலும் வாய்தாக்களாக 1-ம் வாதியான வா.சா.1-ஐ பிரதிவாதி

தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்ததாலே இந்நீதிமன்றம் கடந்த 15.11.2022 அன்று பிரதிவாதி தரப்பில் No Representation என்பதனாலேயே வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக 19.11.2022, 22.11.2022, 13.12.2022 மற்றும் 21.12.2022 ஆகிய தேதிகளில் தொடர்ந்து பிரதிவாதி சாட்சி விசாரணைக்காக இந்நீதிமன்றம் வாய்தா கொடுக்கப்பட்டும் பிரதிவாதி தரப்பில் எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு கடந்த 23.12.2022 அன்று தீர்ப்புரைக்கா போடப்பட்ட நிலையில் அ ன்று இந்த இடைமனுவினை துாய கரமின்றி பொய்யான காரணம் கூறி பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த இடைமனுவுடன் வா.சா.1-ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய Re-call மனு தாக்கல் செய்யாமல் வெறுமனே இந்த இடைமனுவான Re-open மனுவை மட்டும் தற்போது தாக்கல் செய்ய இயலாது. இந்த முரண்பாடு காரணமாகவும் இந்த மனுவானது தள்ளுபடிக்கு தருகதையாக உள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைக்கு</u>**

3. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது 15.11.2022 அன்று வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்றாக வாய்தா போடப்பட்டுள்ளது. என்றும், மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியல்லாமையால் மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய விபரம் கூறமுடியாமல் போய்விட்டது என்றும், எனவே நீதிமன்றம் வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யாமல் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா

போட்ப்பட்டுள்ளது என்றும், மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது மனுதாரரின் வழக்கை நிரூபிக்க அவசியமானது என்றும், எனவே வாதிகள் தரப்பு சாட்சியை மனுதாரர்/பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்வதற்காக விசாரணை முடிக்கப்பட்டதை மறுதிறப்பு (Re–open) செய்ய கோரியுள்ள இம்மமனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

**6.** எதிர்மனுதாரர்கள் தரப்பில், பிரதிவாதி சீர்காழியில் உள்ள பிரபலமான பெட்ரோல் பங்கின் பங்குதாரர் மற்றும் இளங்கலை பட்டம் பெற்றவர் என்றும், அவ்வாறு இருக்க அவருக்கு அதிகப்படியான காய்ச்சல் இருந்ததாகவும் அதன் காரணமாக அவரது வழக்கறிஞரை சந்திக்க இயலாமல் போய்விட்டது என கூறியிருப்பது ஏற்க்கூடியதல்ல என்றும், மனுதாரருக்கு எந்த தேதியிலிருந்த எந்த தேதி வரை அதிகப்படியான காய்ச்சல் இருந்தது எனவும் எப்பபோது காய்ச்சர் குணமானது என்று மனுவில் கூறப்படவில்லை என்றும், மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் கற்பனையானது பொய்யாது என்றும், இடைமனுவில் 1-ம் வாதியான வா.சா.1-ஐ கடந்த 15.11.2022 அன்று பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்ததாகவும் அதிக காய்ச்சல் காரணமாக பிரதிவாதி அவரது வழக்கறிஞரை சந்தித்து குறுக்கு விசாரணைக்கு விவரம் கூற வில்லை என கூறியிருப்து இவ்வழக்கிற்காக சொல்லப்படும் வடிகட்டிய பொய்யாகும். 1-ம் வாதியான வா.சா.1 ஐ கடந்த 10.10.2022, 01.11.2022, 08.11.2022 மற்றும் 15.11.2022 ஆகிய நான்கு தேதிகளிலும் வாய்தாக்களாக 1-ம் வாதியான வா.சா.1-ஐ பிரதிவாதி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்ததாலே இந்நீதிமன்றம் கடந்த 15.11.2022 அன்று பிரதிவாதி தரப்பில் No Representation என்பதனாலேயே வாதி தரப்பு சாட்சி முடிக்ப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிக்காக 19.11.2022, 22.11.2022, 13.12.2022 மற்றும் 21.12.2022 ஆகிய தேதிகளில் தொடர்ந்து பிரதிவாதி சாட்சி விசாரணைக்காக இந்நீதிமன்றம் வாய்தா கொடுக்கப்பட்டும் பிரதிவாதி தரப்பில்

எந்த ஒரு மனுவும் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு கடந்த 23.12.2022 அன்று தீர்ப்புரைக்கா போடப்பட்ட நிலையில் அ ன்று இந்த இடைமனுவினை துாய கரமின்றி பொய்யான காரணம் கூறி பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த இடைமனுவுடன் வா.சா.1-ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய Re-call மனு தாக்கல் செய்யாமல் வெறுமனே இந்த இடைமனுவான Re-open மனுவை மட்டும் தற்போது தாக்கல் செய்ய இயலாது என்றும், இந்த முரண்பாடு காரணமாகவும் இந்த மனுவானது தள்ளுபடிக்கு தருகதையாக உள்ளது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்தததில் அசல் வழக்கை மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்தக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. 15.11.2022 அன்று வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்றாக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் சரியல்லாமையால் மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூறமுடியாமல் போய்விட்டது என்று கூறியுள்ள நிலையில், அதற்கான எவ்வித ஆவணமும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யவில்லை. இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இந்த வழக்கில் இரு தரப்பையும் கேட்டு வழக்கை தகுதியின் அடிப்படையில் முடிவு செய்துதான் இயற்கையின் நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாருக்கு இறுதி வாய்ப்பு அளிக்கும் விதமாக இம்மனுவை கீழ்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.1,000/- ஐ 14.09.2023-ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 15.09.2023.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஓம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.4/2022–ல்
அசல் வழக்கு எண்.284/2017
நாள்.07.09.2023.